முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

திருச்சி தெற்கு மாவட்டத்தில் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கல்!

மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

முத்தமிழ் கலைஞர் 03.06.2026 அன்று பிறந்தநாளை முன்னிட்டு காலை 9 மணி அளவில் திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட, மாவட்ட/மாநகர/ பகுதி /ஒன்றிய / நகர / பேரூர் கழகங்களில் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கும் விழா !

வ. எண்	மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றியம், நகர, பேரூர்	தலைமை	கொடியேற்றுபவர்கள்	கொடி கம்பங்களின் எண்ணிக்கை
1	திருச்சி தெற்கு மாவட்டம்	அன்பில் மகேஸ் பொய்யாமொழி	கவிஞர் சல்மா MP	1
2	திருச்சி கிழக்கு மாநகரம்	மு. மதிவாணன்	அன்பில் மகேஸ் பொய்யாமொழி	1
3	மலைக்கோட்டை பகுதி	மருந்துக்கடை R. மோகன்	B.A.நூர்கான்	10
4	மார்க்கெட் பகுதி	R.G.பாபு	பொன் செல்லையா	10
5	பாலக்கரை பகுதி	TPS.ராஜ் முகம்மது	N. தமிழ் செல்வன்	10
6	அரியமங்கலம் பகுதி	AMG. விஜயகுமார்	வண்ணை அரங்கநாதன்	10
7	கலைஞர் நகர் பகுதி	G. மணிவேல்	இரா. சந்திரமோகன்	10
8	காட்டூர் பகுதி	O. நீலமேகம்	K.C. பழனிச்சாமி	10
9	பொன்மலை பகுதி	EM. தர்மராஜ்	U. ராஜேஷ்வரன்	10
10	திருவெறும்பூர் பகுதி	S.சிவக்குமார்	நவல்பட்டு K. சண்முகம்	10
11	துவாக்குடி நகரம்	E. காயாம்பு	லீலாவேலு	17
12	திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம்	K.S.M.கருணாநிதி	KN. சேகரன்	11
13	திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம்	C. கங்காதரன்	இரா. மூக்கன்	10
14	கூத்தைப்பார் பேரூர்	MRTPK தங்கவேலு	அ.த.த. செங்குட்டுவன்	12
15	மணப்பாறை நகரம்	மு.ம.செல்வம்	இரா. குணசேகரன்	27
16	மருங்காபுரி வடக்கு	C.செல்வராஜ்	KKK. கார்த்திக்	18
17	மணப்பாறை ஒன்றிய	C. ராமசாமி	MR. ராஜ் மோகன்	14
18	மருங்காபுரி தெற்கு ஒன்றிய	C. சின்னடைக்கன்	P.M.சபியுல்லா	15
19	மருங்காபுரி மத்திய ஒன்றிய	R. பழனியாண்டி	V.தனசேகரன்	15
20	வையம்பட்டி வடக்கு ஒன்றிய	R. ஸ்ரீரெங்கன்	S.பன்னீர் செல்வம்	10
21	வையம்பட்டி தெற்கு ஒன்றிய	VA. ராஜேந்திரன்	M.M.மாரியப்பன்	10
22	பொன்னம்பட்டி பேரூர்	KA.நாகராஜ்	N.கோவிந்தராஜ்	15

மேற்கண்ட நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, மாநகர, நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தொண்டர்கள் என அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அன்பில் மகேஸ் பொய்யாமொழி,
மாவட்ட கழக செயலாளர்,
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

திருப்பூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் –

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பூர், ஜூன் 2 - திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம் 30.05.2026 சனிக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் திருப்பூர், தாராபுரம் சாலையில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயம்", "தளபதி அரங்கில்" மாவட்ட கழகச் செயலாளர் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கழக துணைப் பொதுசெயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் கலந்து கொண்டு கருத்துரையாற்றினார். இதில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன :

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க ஜீன் 3ல் நம்மில் மறைந்து மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை செம்மொழி நாளாக கொண்டாடுவதனவும், அன்றைய நாளில் பொது மக்களுக்கு உபயோகபடும் நல் காரியங்களில் ஈடுபடவும், கழக இருவண்ண

கொடியேற்றி இனிப்பு வழங்கியும் திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு. கழகத்திற்குப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கிளை கழக நிர்வாகிகள் சிறப்பாக கொண்டாடுவதன இச்செயற்குழு கூட்டத்தின் வாயிலாக ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்று ஆட்சி நடத்தி வரும் அரசு சட்ட ஒழுங்கை சீர்செய்யாமல் கை கட்டி வேடிக்கை பார்த்தும், பாராமலும் இரும்பதோடு தேர்தல் பரப்புரையில் வீர வசனம் பேசியவர்கள் வாயடைத்து கொண்டும், ஆட்சியை காப்பாற்ற சில கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களை குதிரை பேரம் குதிரை வேகத்தில் ஜனநாயகத்திற்கு எதிராக குழி தோண்டி புதைக்கும் நோக்கில் இப்புதிய அரசு மேற்கொண்டு வருவதை வன்மயா கண்டிக்கிறது, இச்செயலை தமிழகம் ஒரு போதும் ஏற்காது, மேலும் வன்மையாக கண்டிப்பதோடு சட்ட ஒழுங்கை சரி செய்ய வேண்டி இக் கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நடத்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில் தாராபுரம், காங்கேயம் தொகுதிகளில் கடுமையாக பணியாற்றிய நாம் தோல்வி அடைந்து விட்டோம், மக்களின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு கழகப் பணியை தொய்வில்லாமலும், துவண்டு விடாமலும் தொடர்ந்து பணியாற்றி மீண்டும் வெல்வோம், கழகத் தலைவரின் கரங்களை வலுப்படுத்துவோம் என்றும் இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில் சென்னை கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியை தழுவிய கழகத் தலைவர் தமிழகத்திற்கு எண்ணற்ற திட்டங்களை வழங்கியும் இந்நிகழ்வு நடந்துள்ளது மனதை வெகுவாக ஒவ்வொரு தி.மு.க. தொண்டனையும் பாதித்துள்ளது என்பதை நாம் காண்கின்றோம், இதனை திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு வருத்தத்தை பதிவு செய்வதோடு தி.மு.க. வெற்றி தோல்வியில் துவண்டு விடாமல் மீண்டும் மக்கள் பணி செய்வதெனவும், கழகத் தலைவருக்கு என்றும் உறுதுணையாக செயல்படுவோம் என கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறம்பட மக்கள் நலன் காத்திட சட்டமன்றத்தின் குரலாக செயல்படுவதற்கு இக்கூட்டத்தின் வாயிலாக பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரியப்படுத்திக் கொள்கிறோம்,

தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு தேர்தல் வாக்குறுதியில் இலவச மின்சாரம் 200 யூனிட் வீடுகளுக்கும் இலவசம் என்று கூறிவிட்டு பொது மக்களை ஏமாற்றி வாக்கு வாங்கிவிட்டு தற்பொழுது 500 யூனிட் மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு மட்டும் பொருந்தும் என்று கூறுகின்றனர், இதை இக்கூட்டத்தின் வாயிலாக வன்மையாக கண்டிப்பதோடு அனைத்து பொது மக்களுக்கும் 200 யூனிட் மின்சாரம் வழங்க வேண்டும் என்று கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு தேர்தல் பரப்புரையில் விவசாய பயிர்க் கடன் முழுவதும் தள்ளுபடி என வீர வசனம் பேசிவிட்டு தற்பொழுது குறிப்பிட்ட அளவு முறையில் கடன் தள்ளுபடி என அறிவித்ததோடு நபார்டு வங்கியின் சட்ட திட்டங்கள் கூட தெரியாமல் அரை குறையாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதை திருப்பூர் கிழக்கு மாவட்ட செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது, உடனடியாக அனைத்து விவசாயிகளுக்கும் விவசாய பயிர்க் கடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பல்லடத்தில் ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டம் மாவட்ட துணை செயலாளரும், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவருமான வழக்கறிஞர் குமார் தலைமையில், பல்லடம் மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரையில், திருப்பூர் வடக்கு மாவட்ட அமைப்பாளர் பழனிச்சாமி, திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் மா. கன்னிமுத்து, திருப்பூர் மத்திய மாவட்ட அமைப்பாளர் சுப்பிரமணியம், திருப்பூர் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் சக்திவேல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கழக மாநில ஆதி திராவிடர் நலக்குழு இணை செயலாளர் டாக்டர். திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி கலந்து கொண்டு ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகளிடம் கலந்து உரையாடி, வருகின்ற ஜூன் 3ம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா ஆதி திராவிடர் நலக்குழு சார்பில் கொண்டாடுவது குறித்தும் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு மாவட்ட தலைவர்கள், மாவட்ட துணை தலைவர்கள் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர் என பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை

சேலம் கிழக்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடுவோம்!

மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிக்கை!

சேலம், ஜூன் 2 - சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேலம் கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக பொது உறுப்பினர்கள் கூட்ட தீர்மானத்தின் படி, "கலைஞர்" தமிழகம் கண்ட நான்கெழுத்து மந்திரம்! தமிழ் மக்களின் உயிர்த்துடிப்பு! இந்தியா கண்ட அரசியல் அதிசயம்! "உடன் பிறப்பு" என்ற ஒற்றை சொல்லால் சாதி, இனம், மதம், மொழி என்ற பேதங்களை ஒழித்த நல்லுறவு! பேச்சால், எழுத்தால், உரையாடல் வீச்சால் உள்ளங்கவர்ந்த அறிவாற்றல்! தன்னலமற்ற தலைமைப் பண்பு! 5 முறை ஆட்சிப் பொறுப்பில் இருந்த போதெல்லாம் தீட்டிய பல்வேறு திட்டங்களில் வாழுகின்ற பெருமை! மனிதநேயம் காத்திட்ட மகத்தான பண்பு! தூய்மையும் வாய்மையும் நிரம்பிய நெஞ்சுரம்!

"வாருங்கள் எல்லோரும் மொழிப் போருக்கு சென்றிடுவோம் வந்திருக்கும் இந்திப் பேயை விரட்டியடிப்போம்" என்று அரைக் கூவல் விடுத்த மொழி உணர்வு! தலைவன் இட்ட கட்டளையை நிறைவேற்ற தண்டவாளத்தில் தலை வைக்கத் தயங்காத வீரம்! எண்பது ஆண்டு பொது வாழ்வின் சாதனைகளால் மறைந்த பின்னரும் வாழுகின்ற மகத்துவம்!

இப்படி உலக அளவில் பெயர் பெற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா வருகின்ற

03.06.2026 அன்று கொண்டாடப்படவுள்ளது.

அதன்படி வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட கழக அலுவலகம் தளபதி.மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் உள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு காலை 08.30 மணிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளது. அதனை தொடர்ந்து சேலம் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து நகர, ஒன்றிய, பேரூர், ஊராட்சி, வார்டு, கிளை என அனைத்து இடங்களிலும் முத்தமிழறி ஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா கோலகலமாக கொண்டாடப்பட வேண்டும்.

கொடியேற்றுதல், தோரணங்கள் அமைத்தல், ஏழை எளியவருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், அன்னதானம், இனிப்புகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கான சிறப்பு ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்ட கழகத்தின் ஆலோசனையுடன் சிறப்பாக செய்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுக்கோட்டை தெற்கு மாநகர தி.மு.க. சார்பில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஸ் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்வில் மாநகர துணைச் செயலாளர்கள் ப.ரெங்கராஜ், பழனிவேலு மற்றும் வட்டக் கழக செயலாளர்கள், வட்ட பிரதிநிதிகள், நிர்வாகிகள் உள்ளனர். கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவதென தீர்மானிக்கப்பட்டது.

குற்றாலம் அருவி பகுதிகளில் வளர்ச்சிப் பணிகள்!

தென்காசி, ஜூன் 2– தென்காசி மாவட்டம் குற்றாலம் அருவிப் பகுதிகளில் சுற்றுலாத் துறை மூலம் பல்வேறு வளர்ச்சி பணிகள் நடைபெற்று வருகிறது.

இதில் மெயின் அருவியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற சுற்றுலாத்தலமான குற்றாலத்தில் உள்ள மெயின் அருவி,புலியருவி மற்றும் ஐந்தருவி ஆகிய அருவி பகுதிகளில் சுற்றுலாத்துறை மூலம் பல கோடி மதிப்பில் பல்வேறு வளர்ச்சி பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் குற்றாலம் மெயின் அருவியில் சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி பழைய பாதுகாப்பு வளைவை அகற்றிவிட்டு, புதிதாக பாதுகாப்பு வளைவு அமைக்கப்பட்டு வருகிறது.மேலும் பெண்கள் உடை மாற்றும் அறை,நவீன சுகாதார வளாகம்,வாகன நிறுத்தும் இடத்தில் உள்ள சுற்றுச் சுவர் கட்டப்பட்டு வருகிறது.

குற்றாலம் மெயின் அருவியில் நடைபெற்று வரும் இப்பணிகளை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் பார்வையிட்டு ஆய்வுப் பணி மேற்கொண்டார். அப்போது அங்கு பணியில் ஈடுபட்டிருந்த அரசு ஒப்பந்ததாரர் மற்றும் பேரூராட்சி பொறியாளர்களிடம் குற்றால சீசன் விரைவில் துவங்க இருப்பதை முன்னிட்டு பணிகளை விரைந்து முடிக்கு மாறு கேட்டுக் கொண்டார்.

நிகழ்வில் தென்காசி கிழக்கு ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம் குற்றால நாதர் சுவாமி கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் வீரபாண்டியன், சுந்தர்ராஜன் மாவட்ட பிரதிநிதி வல்லம் செல்வம் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் சுரேஷ், ஹரி மற்றும் பேரூராட்சி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மதுராந்தகம் சி. ஆறுமுகம்
ஜூன் 2 (2005)

கழகம் துவங்கிய காலத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்.

மதுராந்தகம் ஒன்றியச் செயலாளராகவும், தொடர்ந்து 20 ஆண்டுகள் செங்கற்பட்டு மாவட்டக் கழக செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் – தி.மு.க. அறக்கட்டளை உறுப்பினர், கழக சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளையும் வகித்தவர்.

மூன்று முறை மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். குறிப்பாக, 1984ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 90 பேர் இவரை எதிர்த்து போட்டியிட்ட போதும், கடுமையாக போராடி வெற்றி பெற்றவர்.

1949 முதல் 2005 வரை கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர். மிசா சட்டத்தில் ஒரு வருடம் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தி.வ.விஸ்வநாதன்
ஜூன் 2 (2023)

தனது இளமை பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

திருவொற்றியூர் பகுதியில் வட்டச் செயலாளர், நகரச் செயலாளர், நகர பொறுப்பாளர், மாவட்ட பொருளாளர், மாவட்ட துணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

திருவொற்றியூர் நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.